**DEPOSITION OF WITNESS.**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.**

**STC.No.1088/2023**

Deposition of DW–1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | வசந்தி | **Age** | : | 48/2026 |
| **Husband Name** | : | ராஜா | **Religion** | : | இந்து |
| **Village** | : | போடிநாயக்கனூர் | **Calling** | : | அங்கன்வாடி பணியாளர் |
| **Taluk** | : | போடிநாயக்கனூர் | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **13/03/2026.**

புகார்தாரர் ஆஜர், எதிரி ஆஜர். இரு தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

**எதிரி தரப்பு முதல் விசாரணை:**

1) நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நானும் என் கணவரும் ஐஸ் வியாபாரம் செய்து வருகிறோம். எனக்கு 2001 ஆம் வருடம் ஏழாவது மாதம் திருமண நடந்தது. எதிரி சுகப்பிரியாவை நான் பார்த்துள்ளேன். எனது வீட்டிற்கு வருவார். வீட்டிற்கு அவரும் அவரது கணவரும் சேர்ந்து வருவார்கள். அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வருவார்களா என்றால் 12 முறை வந்துள்ளார்கள். எனக்கும் அவர்களுக்கும் நல்ல பழக்கம் உள்ளது. சுகப்பிரியாவின் கணவர் யார் என்பது குறித்து போட்டோவை காண்பித்தால் என்னால் குறிப்பிட்ட சொல்ல முடியுமா என்றால், ஞாபகம் இல்லை. நான் எதிரியின் கணவரை இதுவரை பார்த்ததில்லை. எதிரி ஏலக்காய் வியாபாரம் செய்து வருகிறார்.

2) எதிரி சுகப்பிரியா ட்ராவல்ஸ் என கடை வைத்து நடத்தி வரும் விபரம் எனக்கு தெரியாது. என் கணவருக்கு எவ்வளவு வருமானம் வரும் என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் அங்கன்வாடியில் உதவியாளராக இருப்பதால் அந்த விபரம் எனக்கு தெரியாது. என் கணவர் என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் ஹோட்டல் வைத்து நடத்தி வந்தார். தற்போது இல்லை. எனது கணவர் வருமான வரி செலுத்தி வருகிறார் என்ற விபரம் அவர் சொல்லி கேள்விபட்டிருக்கிளேன். எதிரி எந்த தேதியில் பணம் வாங்கினார் என்று தேதி ஞாபகம் இல்லை. எதிரி பணம்

வாங்கியதற்கு ஆதரவாக என்ன ஆதாரம் கொடுத்தார்கள் என்றால் கொடுத்தார்கள். நாங்கள் வாடகை வீட்டில் வசித்து வருகிறோம் என்றால் இல்லை சொந்த வீட்டில் வசித்து வருகிறோம்

<u>புகார்தரப்பு குறுக்கு விசாரணை:</u>

3) எனக்கு எதிரியை தெரியுமா? என்றால், தெரியும். எதிரியுடன் எனக்கு தனிப்பட்ட முறையில் பழக்க வழக்கம் உள்ளதா? என்றால், இல்லை. சுகப்பிரியாவும் அவரது கணவரும் வந்து என் கணவரிடம் பணம் வாங்கினார்கள். எவ்வளவு பணம் வாங்கினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா? என்றால், அவர்கள் 15 லட்சம் கேட்டார்கள். அவ்வளவு இல்லை என்று சொல்லி என் கணவர் 12 லட்சம் கொடுத்தார். அந்த பணத்தை சுகப்பிரியாவும் அவரது கணவரும் எண்ணி சரிபார்த்துதான் வாங்கிச் சென்றார்கள். எதிரியும் அவரது கணவரும் எங்கள் வீட்டில் வந்து எவ்வளவு நேரம் இருந்திருப்பார்கள்? என்றால், சுமார் 1 முதல் 1 ¼ மணி நேரம் இருந்திருப்பார்கள். அந்த 1 மணி நேரமும் நான் அவர்களுடன் தான் இருந்தேனா? என்றால், ஆமாம். அங்கு யார் யார் இருந்தோம்? என்றால், நானும், என் கணவரும், எதிரியும், அவரது கணவரும் நான்கு பேரும் தான் இருந்தோம்.

4) அவர்களுக்கும் என் கணவருக்கும் என்ன பேச்சு வார்த்தை என்று எனக்கு தெரியுமா? என்றால், தெரியாது. ஃபோனில் பேசிக் கொள்வார்கள். என் கணவரிடம் இருந்து எதிரி மற்றும் அவரது கணவர் பணம் வாங்கினார்கள் என்ற விபரம் மட்டும் தான் எனக்கு தெரியும் வேற எந்த விவரமும் தெரியாது என்றால், சரிதான். பணம் வாங்கியதற்கு ஆதரவாக என்ன கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியுமா? என்றால், தெரியாது.

Taken down before me in Open Court,
and read over to the witness and admitted
by the deponent to be correct.

NALLA KANNAN M Digitally signed by NALLA KANNAN M Date: 2026.03.13 18:23:44 +0530

**Judicial Magistrate,**
**Bodinayakanur.**